REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 1௨ செவ்வாய் (12—2—57) ★ ★ வெளியீடு: மாசி 2௨ புதன் (13—2—57) [இதழ் 211

'ஓட்டு' கேட்க வந்த மந்திரியை மக்கள் சூழ்ந்தனர்

'ஓட்டு' கேட்க வந்தார், ஆந்திர மாநில மந்திரி திம்மா ரெட்டியார்! வந்தவரை வழிமடக்கி சூழ்ந்துகொண்டனர், மக்கள்!

'மலிவான விலையில் உணவு கொடுங்கள்' குடிக்கவும் பாசனத்திற்கும் போதுமான தண்ணீர் கொடுங்கள்!' என்று குரல் கொடுத்தனர்!

'காங்கிரசுக்கா அல்லது காங்கிரசல்லாதவருக்கா எங்கள் ஓட்டு,' என்பதை நாங்கள் பிறகு முடிவு செய்கிறோம்; நீங்கள் உடனடியாக வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து தாருங்கள் என்று மந்திரியிடம் மக்கள் கேட்டிருக்கின்றனர்!

சாய இருக்கும் சர்வாதிகாரியின் ஆணவப் பாட்டை

நேரு கூற்று அரசியல் பேச்சாகுமா?

பகைவரின் வாளுக்கு அஞ்சாத வீரர் வழி வந்த நாம், மாற்றாரின் பணத்திற்கு அஞ்சிவிட மாட்டோம்

சிறப்பு மாநாட்டில் அண்ணா முழக்கம்

'தமிழ் நாட்டிற்குப் புதியதோர் அந்தஸ்தினைத் தேடித்தருமாறு' தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அண்ணா அவர்கள் அன்பழைப்பு விடுத்தார்கள்.

நேருவின் போக்கு இட்லர்போன்ற சர்வாதிகாரியின் ஆணவப்போக்கு என்பதை விளக்கி, 'இந்த ஆணவத்தைக் கண்டு நாங்கள் அஞ்சிடமாட்டோம்,' என்று வீரமுழக்கமிட்டார்கள்.

'எல்லாம் இருந்தும், தேவையான—இன்றியமையாத செலவுகளுக்குகூடத் தேர்தலில் ஈடுபடும் தோழர்களிடம் பணம் இல்லையே என்ற நிலை கவலைக்குரியதல்ல,' என்று கூறி, உரமூட்டினார்கள்

சென்னை தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாட்டில், அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

"பெய்த மழையை, வீணாகாமல் தேக்கிவைத்து, குளங்களிலிருந்து வாய்க்கால்களும், வாய்க்காலிலிருந்து வயலுக்கும் பாய்ச்சி பயிர் வளரச் செய்வதுபோல, மக்களிடத்தில் தோன்றியுள்ள ஆர்வத்தை முறையாகத் தேக்கி, சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

"பேசிய தம்பிமார்கள் எல்லாம், தேர்தலில் ஈடுபடும்போது, 'எங்களுக்குத் தேவையானதெல்லாம் இருக்கிறது; ஆனால், குறைந்தபட்சமான—இன்றியமையாத செலவுகளுக்கான பணம்தான் இல்லை,' என்று கூறினார்கள். தம்பிமார்களைக் கேட்டுக்கொள்வேன்—நீங்கள் இது பற்றியோ, எதிர்த்துப் போட்டியிடுபவர்களின் பணபலத்தைப் பற்றியோ கவலைப்படாமல் பணியாற்றுங்கள்; வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்றேனும் அவசியமான செலவுகளைச் சரிக்கட்டிக்கொள்ளுங்கள்,'— என்று!

இப்படை தோற்கின்........!

"இங்கே கூடியிருக்கிற மக்களின் ஒளி நிறைந்த கண்கள் எனக்கு நம்பிக்கை தருகின்றன. இங்கே நான், நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களைக் காண்கிறேன். ஆம் இவர்கள்தான், நாட்டின் எதிர்காலம் பற்றிய தீர்ப்பை எழுதப் போகிறவர்கள். இவர்கள் எல்லாம் தமிழ் மறக்குடிப் பிறந்த மாவீரர்கள் என்பதை நிலைநாட்டிக் கொள்ளும் தீர்ப்பை வழங்கவேண்டும் குட்டக் குட்ட குனிபவர்கள் தமிழர்கள் என்ற நிலையை மாற்றியமைக்கப்போகும் வீரர்கள்.

"'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'—என்று நான் அடிக்கடி கூறுவதையே இப்போதும் கூறவிரும்புகிறேன்.

நாட்டிற்கு புதிய அந்தஸ்து!

"தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவது, அதில் உள்ள எங்களுக்குப் புதிய அந்தஸ்து தேடிக்கொள்வதற்காக அல்ல!

"தம்பி சம்பத் கூறியதைப் போல, 'தேர்தலில் ஈடுபட்டுத்தான் அந்தஸ்து தேடிக்கொள்ள வேண்டும்' என்ற நிலையில் உள்ள அறிமுகம் இல்லாதவர்கள் அல்ல, தி. மு. கழகத்தில் இருப்பவர்கள்! நாட்டிற்குப் புதியதோர் அந்தஸ்து தேடித் தருவதற்காகவே தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்பதை நாட்டவர் உணர்ந்திருக்கிறார்கள். உணராத மக்கள், உணர வேண்டும் என்று விரும்புகிறேன்.

வாளுக்கு அஞ்சாதவர்கள்

"நமது முன்னோர்கள், எதிரியின் வாளுக்கு அஞ்சாத வீரம் படைத்திருந்தவர்கள்; பகை கொண்ட மாற்றானின் படையெடுப்புக்கு அஞ்சாது வாழ்ந்தவர்கள்! அவர்கள் பரம்பரையில் வந்த நாம், மாற்றாரின் பணத்திற்கு அஞ்சிவிடக் கூடாது!

"குதிரைப் படை கொண்டு வந்த மாற்றானிடம் மண்டியிட்டுவிடாத மூதாதையர் வழி வந்த நாம், மாற்றாரின் மெருகு கலையாத மோட்டார் படைக்கா அஞ்சுவது?

சாயவிருக்கும் சர்வாதிகாரி

"அண்மையில் சென்னைக்கு வந்திருந்தாராம், பண்டித நேரு—சொன்னார்கள்; கூட்டம் ஒன்றில் பேசுகையில், 'வானமே இடிந்து விழுந்தாலும் திராவிட நாடு தர முடியாது' என்று பேசினாராம்—பத்திரிகையில் பார்த்தேன்! எந்தத் துணிவில் நேரு பண்டிதர் இப்படிக் கூறினார் என்று எனக்குத் தெரியவில்லை? அவர் எந்தத் துணிவில் கூறியிருந்தாலும், தம்மிடம் உள்ள பணபலம்—படைபலம்— அதிகார பலம் இவற்றைக் கொண்டு கூறியிருந்தாலும் நாம் அஞ்சப் போவதில்லை. அவர் எத்தனைதான் அழுத்தந் திருத்தமாக 'இனியும் ஒரு பாகிஸ்தான் கிடையாது' என்று கூறினாலும், நாம் அஞ்சப் போவதில்லை!

"அவர் செல்லும் பாட்டை ஆணவத்தின் ஒரே பாட்டை! சாயவிருக்கும் ஒரு சர்வாதிகாரியின் பாட்டை என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம்! ஹிட்லர் கூடத்தான், இதேபோல ஆணவம் கொண்டு பேசினான்! அவனது ஆணவத்தால் ஜெர்மனியையும் காப்பாற்ற முடியவில்லை—தன்னையும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை!

அரசியல் பேச்சா?

"'திராவிட நாடு கிடையாது போ!' என்று பேசுவது என்ன பேச்சு? அரசியல் பேச்சா அது?

"திருட்டுச் சாராயம் குடித்துவிட்டு ஆடி அசைந்துகொண்டே வருபவன், எதிரில் வரும் மனிதனை நோக்கி, இது என்ன, விளக்குக் கம்பமா?'—என்று கேட்டு, 'நான் மனிதனப்பா' என்று கூறிய பிறகும், நீ என்ன கூறினால் என்ன? நீ விளக்குக் கம்பம்தான்' என்று கூறுகிறான். இதுபோலவா, 'நீ என்னதான் கூறினாலும், நான் திராவிட நாடு தரமுடியாது' என்று பண்டிதர் பேசுவது?

"பண்டிதரை, 'அகில உலகம் அறிந்தவர்' என்கிறார்கள்; 'பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிப்பவர்' என்று போற்றுகிறார்கள். நான் எத்தனை, சென்னைக் கூட்டங்களில் கேட்டேன்—'சென்னைக்கு நேரு வரும்போது என்னையும் அவர் பேசும் மேடையில் ஒரு அரைமணி நேரம் பேசுவதற்கு வாய்ப்புத்

(4-ம் பக்கம் பார்க்க)

★

"என்னுடைய காஞ்சிபுரம் தொகுதியிலே, சுமார் 130 கிராமங்கள் இருக்கின்றன; இவற்றில் நான் 120 கிராமங்களைப் பார்த்துவிட்டேன்.

"பல கிராமங்களுக்கு நடந்து செல்லக்கூட சரியான பாதைகள் இல்லை! பல கிராமங்களில் வீடுகள் சரிந்து கிடக்கின்றன—கூரைகள் பிய்ந்துகிடக்கின்றன! பல கிராமங்களில் பள்ளிகளே இல்லை! கிராமங்களில் வாழும் மக்கள் நோய் நொடிகளால் நொந்துபோய் கிடக்கிறார்கள்! இந்த நிலை, 10 ஆண்டுகள் ஆகிவிட்டன 'சுதந்திரம்,' பெற்று—என்று சொல்லப்படுகிற நேரத்தில் நிலவுகிறது. '2,000 கோடிக்கும் அதிகமான ரூபாய் செலவிட்டுவிட்டோம,' என்று கூறுகிறார்கள்; அதற்குப் பிறகும் நிலவுகிற இந்த நிலை, மாறுவது எப்போது? இந்த நிலையை சட்ட மன்றங்களிலே எடுத்துச்சொல்ல— இந்த நிலை மாறப் போராட ஆள் வேண்டாமா?

"இங்கே பேசிய எனது தம்பிமார்கள் எல்லாம், அவரவர்கள் தொகுதி பற்றி எடுத்துச் சொன்னார்கள். நாட்டிலே நிலவும் அவல நிலையை, அந்தந்தத் தொகுதி மக்களுக்கு இந்த நேரத்தில் நன்கு விளக்கி வருகிறார்கள். மக்களிடத்தில், கழகம் பற்றிய ஆர்வம் வளர்ந்து வருவதைக் கூறினார்கள்; தோழர்கள் இந்த நேரத்தில் செய்யவேண்டியதெல்லாம், மக்களிடை கரைபுரண்டோடும் ஆர்வத்தை எப்படிப் பக்குவப்படுத்திப் பயன்படுத்தலாம் என்று சிந்தித்துச் செயலாற்றுவதுதான்.

டில்லி தட்டிப் பறித்துச் செல்லும் வரிகள்

அதிக பங்கு கேட்கின்றனர் ஆந்திரர்

ஐதராபாத், பிப். 11—

டில்லி, வரி வசூலிக்கும் போக்கு குறித்து தமிழ் நாட்டில் தி மு. கழகம் எழுப்பிவரும் கண்டனம் யாவரும் அறிந்ததே!

டில்லி தட்டிப்பறித்துச் செல்லும் வரியில் இப்போது ஆந்திரர்கள் அதிக பங்கு வேண்டுமென்று கேட்கின்றனர். டில்லி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆந்திரத்திலும் அரும்பிவரும் விடுதலை வேட்கைக்கு, இது ஒரு துவக்க உருவம் அல்லவா?

பல கட்சிப் பிரதிநிதிகள்

பல கட்சிகளையும் சேர்ந்த ஆந்திர எம். பி-க்கள் பலர், சந்தானம் அய்யங்கார் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள நிதிக் கமிஷனிடம் தந்துள்ள மகஜரில், 'ஆந்திரத்தில் தான் அறுபது சதவிகிதம் புகையிலை விளைகிறது; இதற்கு விதிக்கப்படும் எக்சைஸ் வரி டில்லியிடம் சேர்ந்துவிடுகிறது; டில்லி திருப்பித்தரும் பங்கோ, அற்பமானது; எனவே, இந்த எக்சைஸ் வரியிலும் வருமான வரியிலும் ஆந்திர மாநிலத்திற்கு அதிகப் பங்கு வேண்டும்' என்று கேட்டிருக்கின்றனர்.

அது மட்டுமா?

அதுமட்டுமல்ல; வருமான வரி, ஆந்திரத்தில் அதிகம் வசூலாவது இல்லை என்பதை விளக்கியுள்ள அவர்கள், 'ஆந்திரம் தொழில் துறையில் பின்தங்கிக்கிடக்கிறது' என்ற உண்மையை ஒப்பி, நிதிக் கமிஷன் தலைவருக்கும் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

'சேவை செய்யும்—தியாகம்புரியும் காங்கிரஸ் இன்று இல்லை'

ஆச்சார்யா கிருபளானி வருணனை

போபால், பிப். 11—

சேவை செய்யும் காங்கிரசாக—தியாகம் புரியும் காங்கிரசாக இன்றைய காங்கிரஸ் இல்லை; காங்கிரஸ் இன்று மக்களிடமிருந்து எவ்வளவு அதிகமாக உறிஞ்ச முடியுமோ அவ்வளவு உறிஞ்சுகிறது. ஆனால் மக்களுக்கு எதுவும் திருப்பித் தருவதில்லை.

"பிரிட்டிஷாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு மார்பினைக் காட்டிய காங்கிரசார்தான் இன்று, ஏதுமறியாத மக்கள் மீது துப்பாக்கி முனையைத் திருப்புகின்றனர்.

"பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் எந்தச் சித்திரவதைகளுக்கு எதிராக காங்கிரசார் போராடினார்களோ அந்தச் சித்திரவதைகளை இன்று அவர்களே செய்கிறார்கள்,"

என்று, கூட்டம் ஒன்றில் பேசிய பி. சோ. கட்சித் தலைவர் கிருபளானி கூறியிருக்கிறார்.

சுதந்திரம் பெற்றது எவர்?

"சுதந்திரம் பெற்றது தங்களால்தான் என்று காங்கிரசார் ஏகபோகமாக உரிமை கொண்டாட முடியாது; சுதந்திரம் மக்களின் உதவியால் கிடைத்தது. மேலும், சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ், பல்வேறு மாற்றங்களுக்கும் உட்பட்டுவிட்டது,"

என்றும் கிருபளானி கூறியிருக்கிறார்.

ஜனநாயகம் பிழைக்க! நல்லாட்சி தழைக்க-

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—2—'57 செவ்வாய்

தாராளமே தாராளம்!

தேர்தல் நாள் நெருங்கிக்கொண்டே இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரசுக்கட்சியை விரட்டி அடிக்க வேண்டிய வாய்ப்பைப் பொது மக்களும் பரபரப்புடன் எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர்.

காங்கிரசுத் தலைவர்களின் தேர்தல் கனிவுரைகளை வாக்காளர்கள் கேட்கவும் தயாராக இல்லை. அவர்கள் பேசும் கூட்டங்களுக்குத் தாங்கள் செல்வதையும் அவமானமாகக் கருதுகிறார்கள் மக்கள்.

பெருவாரியான மக்களின் தீர்ப்பு தங்களுக்கு விரோதமாகத்தான் இருக்கப் போகிறது என்ற கசப்பான உண்மையை காங்கிரசுத் தலைவர்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். ஏற்படவிருக்கும் தோல்வியை நினைத்து நினைத்து காங்கிரசுத் தலைவர்கள் பெரும் துக்கத்திலாழ்ந்திருக்கிறார்கள்.

காங்கிரசுப் பெருந்தலைவர்கள் அடைந்துள்ள பீதி கண்டு, இந்தத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியின் பெயரால் போட்டியிட தாங்கள் அறிவில்லாமல் ஒப்புக்கொண்டோமே என்று, சில பல காங்கிரசு அபேட்சகர்கள் வெட்கமும் வேதனையும் பட்டுவருகிறார்கள். தேர்தலில் காங்கிரசின் பெயரால் போட்டியிடுவதின் மூலம், தங்களுக்கு முன்னால் இருந்த மதிப்பும் மாண்பும் தொலைந்துபோக இருப்பதைக்கண்டு அவர்கள் குமுறுகிறார்கள். காங்கிரசு அபேட்சகர்களாகத் தேர்தலில் பங்குகொள்ளுவதின் காரணமாக, அவசியமில்லாமல் பொது மக்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் தாங்கள் பாத்திரமாகவேண்டி வருகிறதே என்று அவர்கள் கண்ணீர் சிந்தவும் செய்கிறார்கள்.

பணம் பிடுங்கும் தேர்தல் கழுகுகள் தங்களைச் சுற்றி, எதெற்கெடுத்தாலும் பணம் பணம் எனப் படமெடுத்தாடும் பாம்பாக மாறி மிரட்டி உருட்டுவதை, பல காங்கிரசு அபேட்சகர்கள் தாங்கிக்கொள்ள முடியாதவர்களாகத் தவித்திடவும்செய்கின்றனர். காங்கிரசுத் தலைவர்களின் தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு, இதுவரை கேட்டபொழுதெல்லாம் ஆயிரம் இரண்டாயிரம் எனக் கொட்டிக்கொடுத்து வந்தது போல் இவ்வாறு நேரடியாகத் தேர்தலில் கலந்துகொண்டு, வாய் வலுத்தவனும், கை வலுத்தவனும் ஆட்டியபடியெல்லாம் ஆடவேண்டி வந்துவிட்டதே எனத் தங்களைத் தாங்களே நொந்துகொண்டு, தேர்தல் நாளை எதிர்பார்த்துக்கொண்டும் பல காங்கிரசு அபேட்சகர்கள் காலங் கழித்து வருகின்றனர்.

தேர்தலில் தாங்கள் பெறவிருக்கும் முடிவை எண்ணியும், பொதுமக்கள் தங்கள் பேச்சைக் கேட்க மறுத்துத் தங்களை வெறுத்து ஒதுக்கும் தன்மை கேவல நிலையைக் கருதியும், தம் காங்கிரசுக் கட்சிப் பெயரால் நிறுத்தப்பட்டுள்ள அபேட்சகர்களில் பலர் முணு முணுக்கும்போக்கைப் பார்த்தும், காங்கிரசுக் கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பில் உள்ள தலைவர்கள், வாக்காளர்கள் ஆதரவு பெற புதுப் புது உபாயங்களைத் தேடத் துவங்கிவிட்டனர். காங்கிரசு கட்சியை நடத்திச் செல்லுகிறவர்களாக மட்டுமே அவர்கள் இல்லாது, அதிகார பீடத்திலும் அவர்களே அமர்ந்திருக்கின்ற காரணத்தால், மக்களைப் புதிதாக மயக்க அரசாங்கத்தையும் துணைக்கழைத்துக்கொள்ளுகின்றனர். பிறகு,

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தங்களால் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது எனப் பெருமையாகப் பீதிக்கொள்ளப்படும் திட்டங்களின் விளைவுகள் ஏதாவது இருக்குமானால், அவ்விளைவுகளின் பயனைக் குறிப்பாக இப்பகுதி மக்கள் கடுகளவும் பெறவே இல்லை. அதாவது, முதல் திட்டத்தின் மூலம் உருவானதாகக் கூறப்படும் பலாபலன் எதுவும் தமிழக மக்களுக்குக் கணிசமாகக் கிடைக்கவே இல்லை. எனவே, முதல் திட்டத்தின் சாதனைகள் எனக் காங்கிரசுத் தலைவர்கள் பேசுகின்ற ஒவ்வொன்றும், தமிழ் மக்களுக்கு மோட்சலோக நரகலோகக் கதைகள்போல் தெரிகின்றன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகும்கூட, காங்கிரசுத் தலைவர்கள் பெருமையடித்துக் கொள்வதுபோல், அத்திட்டத்தின் விளைவுகள் தமிழ் மக்கள் வாழ்வில் தொடர்பு கொள்ளத் தவறியதுடன், தங்கள் எதிர்காலம் குறித்து நம்பிக்கை கொள்ளவும் தமிழ் மக்களுக்கு வழி வகுப்பதாக இல்லை. இந்நிலையில் இரண்டாவது திட்ட ஏற்பாடுகள் குறித்துக் காங்கிரசுத்தலைவர்கள் பேசிவருவதைத் தமிழ் மக்களால் எப்படி நம்ப முடியும்? எனவே, இதுவரை நாடாண்டுவந்த காங்கிரசுக் கட்சியினருக்கு, இந்தத் தேர்தலில் நல்ல தீர்ப்பளிக்க வாக்காளர்கள் முடிவுகட்டிவிட்டார்கள்.

தங்களுக்குக் காத்திருக்கும் முடிவின பயங்கர உருவத்தின் முழுத்தோற்றமும் காங்கிரசுத் தலைவர்களுக்குத் தெளிவாக இன்னமும் தெரியவில்லையானாலும், அதன் நிழல் அரைகுறையாகத் தெரியத் தொடங்கிவிட்டது. அதன் பயனாக, வாக்காளர்களை மயக்கி ஆதரவுபெற புதுப்புது வசதிகளைச் செய்ய இருப்பதாக, இந்தத் தேர்தல் நேரத்தில் காங்கிரசுக் கட்சியினர் அறிவிக்கின்றனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு—நெசவாளர்களுக்குக் குடியிருப்பு வசதி—இரயிலவே ஊழியர்களுக்கு சலுகை என்ற ரீதியில், நாட்டு மக்களில் ஒரு சாராருக்கு உதவி செய்யப்போவதாக காங்கிரசு ஆளவந்தார்கள் ஆசைகாட்டுகின்றனர். காட்டிய ஆசையை செயலாற்றுவார்களோ அல்லது வழக்கம்போல் மோசஞ்தான் செய்யப் போகிறார்களோ யார் கண்டார்கள்?

இது வெறும் தேர்தல் கால கனிவு—மக்களின் ஆதரவிற்காக விரிக்கப்படும் வலை—காங்கிரசு ஆளவந்தார்களின் தாராளமே தாராளம் என்ற கேலிதான் கிளம்பும். இது கண்டு மயங்கி, இந்தத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை விரட்டியடிக்க வேண்டும் என்ற தங்கள் முடிவை, நிச்சயமாக நாட்டு மக்கள் மாற்றிக்கொள்ளப்போவது கிடையாது. இது முக்காலும் உண்மை.

'நயா பைசா' விநியோகம்

ஏப்ரல் முதல் நாணய மாற்றத்திற்கு ஏற்பாடாம்

புதுடில்லி, பிப். 11—

1957-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தற்போதுள்ள நாணயங்களை தசாம்ச நாணயங்களாக மாற்றுவதற்குப் போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதாம். எல்லா சர்க்கார் கஜானாக்கள், ரிசர்வ் பாங்கி, அரசாங்க பாங்கிக் கிளைகள், ஐதராபாத், மைசூர் பாங்கிகள் ஆகியவற்றில் தற்போதைய நாணயங்களை மாற்றுவதற்குப் போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்தப் பாங்கிகளிலெல்லாம், பொதுமக்கள் மாற்றிக் கொள்ளுவதற்காகப் போதிய அளவுக்கு 10, 5, 2 'நயா பைசா' நாணயங்கள் இருக்கின்றனவாம்.

ஆனால் பொதுமக்கள், தற்போதுள்ள நாணயங்களைத் தொடர்ந்து இன்னும் மூன்று வருடங்களுக்கு உபயோகிக்கலாம்; ஆகையால், கஜானாக்களில் புதிய நாணயங்களை மாற்றிக்கொள்வதற்காக மக்கள் அவசரப்படவேண்டிய அவசியமில்லையாம்.

ரூபாய்க்கு தற்போதைய மதிப்பே இருக்கும். ஆனால், தற்போது ரூபாய்க்கு 192 தம்பிடிகள் அல்லது 64 பைசாக்கள் என்றிருப்பதற்குப் பதில், ரூபாய் ஒன்று 100 'நயா பைசா' கொண்டதாக இருக்கும்.

நெசவாளர்கள் மீது திடீர் கருணை!

இந்தியப் பேரரசுக்குப் பிறந்துவிட்டது

புதுடில்லி, பிப. 10—

கைத்தறி நெசவாளர் குடியிருப்பு வசதிக்காக சென்னை மாநிலத்தில் மேலும் மூன்று பகுதிகளில் 'காலனி'கள் அமைப்பதற்கான திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் இப்போது அனுமதி அளித்திருக்கிறதாம்.

இந்தத் திட்டப்படி செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டையில் 60 வீடுகளும், நெல்லை மாவட்டத்தில் உள்ள கல்லிடைக் குறிச்சியில் 100 வீடுகளும் சேலம் மாவட்டத்தில் 100 வீடுகளும் கட்டப்படுமாம்.

இதற்காக டில்லி அரசு சென்னை அரசாங்கத்திற்கு இப்போது ரூ 2,86 000 கடனாக வழங்கியுள்ளதாம்.

ஒரு வீட்டின் செலவு ரூ 3,600 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; இதில் மூன்றில் ஒரு பகுதி நெசவாளருக்கு மானியமாகவும், பாக்கித் தொகை 25 ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டிய நீண்டகாலக் கடனாகவும் கருதப்படுமாம்.

தவணி, சாலைவசதிகளுக்காக மத்திய அரசு ரூ. 2,35 000 கடன் வழங்கியுள்ளதாம்.

பாரிஸ், பிப். 11—

கடந்த இரண்டு வார காலத்தில் 1,000-க்கு மேற்பட்ட அல்சீரிய சுதந்தரப் போராட்ட வீரர்கள் பிரெஞ்சு இராணுவத்தினரால் பிணமாக்கப்பட்டுள்ளனர் என்று செய்தி வெளியாகியிருக்கிறது.

எவருடைய பணத்தைத் தந்து ஓட்டுக் கேட்கப் போகின்றனர், காங்கிரசார்?

வாக்காளரைச் சிந்திக்குமாறு கோருகிறார் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

சென்னை, பிப். 12—

8—2—57-ல், சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை முல்லா சாயபு தெருவில், ஸ்டூடண்ட்ஸ் பாக்குத்தூள் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில் நடைபெற்ற தி. மு. கழக தேர்தல் நிதி அளிப்புக் கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

"தேர்தலில் போட்டியிட திராவிட முன்னேற்றக் கழகம், மக்களை நம்பித்தான் முன்வந்திருக்கிறது. ஸ்டூடண்ட்ஸ் பாக்குத்தூள் கம்பெனி தொழிலாளர்கள், ரிக்ஷாக்காரர்கள் துணி வெளுப்போர், பட்டாணிக் கடைக்காரர்கள், பாட்டாளி மக்கள், நடுத்தர வர்க்கத்தினர், ஆலைத் தொழிலாளர்கள் அங்காடிக் கடையிலிருப்போர், சாதாரண மக்கள்—இப்படிப் பல திறப்பட்ட உங்களின் மகத்தான சக்தியை நம்பித்தான் தி மு கழகம் தேர்தலில் நிற்கிறது. 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போல், மக்கள் கழகத்திற்கு காட்டும் ஆதரவே பாசிச வெறிபிடித்த காங்கிரசுக்கு வைக்கும் வேட்டாகும்!

"என்னிடம் பணபலம் இல்லை; காங்கிரசுக்கோ ஆலை முதலாளிகளும் மற்றும் செல்வந்தர்களும் இலட்சக்கணக்கில் தருகிறார்கள். ஆனால் எங்களுக்கு காலணா அரையணாவாகப் பொதுமக்கள் தருகிறார்கள். இப்படி ஏழை மக்களிடமிருந்து சிறுகச் சிறுகப் பெறும் பணத்திலிருந்துதான் நாங்கள் சுவரொட்டிகள் போடுகிறோம். அந்தச் சுவரொட்டிகளைப் பார்த்த காங்கிரசார் நமக்கு, 'போஸ்டர் புலி'கள் என்று கேலிப் பெயரும் கொடுத்துவிட்டிருக்கிறார்கள். போஸ்டர் போடுவதில் புலிகள் என்று அவர்களே ஒப்புக்கொண்டதனால் அந்த முதல் வெற்றியைத் தேடிக்கொண்டுவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

நடைபெறவிருக்கும் தேர்தல், எனக்கும் என்னை எதிர்த்து நிற்கும் அபேட்சகருக்கும் இடையில் நடைபெறும் போட்டியல்ல; இந்தப் போட்டி, சனநாயகத்திற்கும் காங்கிரசின் பாசிச வெறிக்கும் நடைபெறும் போட்டி! இன்று சனநாயகம் நாட்டில் மலர வேண்டுமா? பாசிச வெறி உலவ வேண்டுமா— என்று, பொதுமக்களை நியாய உணர்வுகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்று திராவிட முன்னேற்றக் கழகம் 150 இடங்களிலே போட்டியிடாவிட்டால் எத்தனையோ காங்கிரஸ்காரர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள். என்பதை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டுகிறேன்.

"தி மு கழகம் தமிழ் நாட்டுத் தேர்தலில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறது; சென்னை நகர அரசியலில் ஓர் மகத்தான சாதனையைச் செய்திருக்கிறது.

"1951ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 25 பேர் காங்கிரசின் சார்பில் போட்டியின்றி வந்தார்களே—இந்தத் தேர்தலில் எத்தனை பேர் அப்படி வந்தார்கள்? அந்த வெற்றி இந்தத் தேர்தலில் மட்டும் எங்கே போயிற்று? அவர்கள் போட்டியின்றி வராததற்குக் காரணம், தி. மு கழகம்தான்.

'பணத்தைக் கொடுத்து ஓட்டுப் பேரம் நடத்த காங்கிரசார் கிளம்பியிருக்கிறார்களே; அந்தப் பணம் யார் கொடுத்தது? யாருடைய பணம்? முத்தனும் முனியனும், கந்தனும் காத்தனும், குடிசையில் வாழும் குப்பனும் பாடுபட்டு உழைக்கும் பாட்டாளிகளும், நடுத்தர மக்களும், தொழிலாளத் தோழர்களும் உழைத்துச் சேர்த்த பணமல்லவா? அவர்களின் உழைப்பால் சேர்ந்த பணத்தை அவர்களிடமே கால் ரூபாய், அரை ரூபாயாகக் கொடுத்து ஓட்டுப் பேரம் பேசுகிறது இன்றைய காங்கிரஸ் கட்சி.

'ஒவ்வொரு வட்டத்திலும் கட்டடங்கள் கட்டுவதும், மேடைகளிலே தி மு. கழக அபேட்சகரையும், எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகரையும் நிறுத்தி இருவரையும் பேசவிடுங்கள். பக்கத்திலே ஓட்டுப் பெட்டி வையுங்கள் மக்கள் இருவருடைய பிரச்சாரத்தையும் கேட்டுவிட்டு யாருக்கு ஓட்டு அளிக்கிறார்கள் என்பதைப்பார்த்து விடுவோம் தைரியம் இருந்தால் இந்தச் சர்க்கார் இப்படிச் செய்து பார்க்கட்டும்—யாராவது மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போடுகிறார்களா பார்க்கிறோம்.

"இந்த நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கிடையாது, காங்கிரசாருக்கு! நாடு குட்டிச்சுவரானாலும் கவலையில்லை, அவர்களுக்கு! 3,000 குடும்பங்கள் பரிதவிக்கின்றனவே — டிராம்வே தொழிலாளர் குடும்பங்கள் வாழ்வையற்றுத் தேம்பித் தவிக்கின்றனவே—கொஞ்சமாவது மானம் இருக்கவேண்டாமா காங்கிரசார் சர்க்காருக்கு?

6 கோடி ரூபாய்க்கு அதிபதியான இராஜா சர். முத்தையாவுக்கு இன்று காங்கிரசிலே தேர்தல் டிக்கெட் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரைக்குடி தொகுதியில் அவருக்குப் போட்டியாக என்னைப்போல ஒரு ஏழையை — தோழர் இராமசுப்பையாவை நிறுத்தியிருக்கிறோம். அங்கு இப்பொழுது நடப்பதென்ன? பணக் கவலில் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு தனக்கு எதிராக நின்ற அபேட்சகரை பணத்தாலேயே தோற்கடித்த முத்தையா இந்தத் தேர்தலில், வீடு வீடாகச்சென்று ஓட்டுக் கேட்கிறாராம்.

'அண்ணா அவர்கள் கூறியது போல், நாங்கள் தோற்றாலும் தோற்போமே ஒழிய, சும்மா மட்டும் விடமாட்டோம், இந்தக் காங்கிரசுக்காரர்களை! ஏறுக படிகளையெல்லாம் ஏறி ஏறி இறக்கவைப்போம் அவர்களை! சும்மா விட்டு விடுவோம் என்று மட்டும் காங்கிரசார் கனவிலும் கருதவேண்டியதில்லை.

'காந்தியாரின் கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிட்ட இப்படிப்பட்ட காங்கிரசாரைத் தேர்தலில் ஆதரிக்கப் போகிறீர்களா? நிலவுடமையாடி வள்ளிப்பமை வளர்த்த ஆய காங்கிரசிலே டிக்கெட்டுக்கு காவடி எடுக்கும் சீமான்களைப் பெற்றிருக்கிற இன்றைய காங்கிரசை ஆதரிக்கப்போகிறீர்களா?—என்று தி மு கழகம் மக்களைப்பார்த்துக் கேட்கிறது.

"மக்களைப்பார்த்து நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், நம் நாட்டு வாழ்வை தேசியத்தின் பெயரால் உறிஞ்சும் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்குப் புத்தி புகட்டுங்கள்—'தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டனாவான்' என்பதுபோல, தட்டிக்கேட்க ஆளில்லாத காரணத்தால் இந்தக் காங்கிரஸ் கட்சி நடத்தும் வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த நீங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்களின் பேராதரவைத் தாருங்கள்—இந்த நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடும் தேசியமுகாமான தி மு கழகத்திற்குப் பொதுமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பைத் தாருங்கள்—கழகத்தைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்யுங்கள் என்பதைத்தான்."

நிகழ்ச்சிகள்

8—2—57 இரவு 7-30 மணிக்கு பெத்துநாய்க்கன்பேட்டை முல்லா

(3-ம் கலம் பார்க்க)

வடநாட்டு அகதிகளுக்கு இந்தியப் பேரரசின் தாராள உதவி

புனர்வாழ்வு, அபிவிருத்திவேலைகள் அளிப்பதில் நேரடியான முயற்சி

கல்கத்தா, பிப் 8—

1956-ம் ஆண்டில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் எண்ணிக்கையின் உச்சஅளவு 3,20,000 என்றும், இதுவரையில் மொத்தம் 39 87,000 இலட்சம் பேர் வெளியேறி வந்துள்ளனர் என்றும் மத்திய அரசாங்க புனர்வாழ்வு இலாகாவால் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிவந்தவர்களுக்கு மேற்கு வங்காளம அல்லாத மற்ற மாநிலங்களில் குடியமர்த்துவதற்கு நிலம் தேடிக் கொடுப்பதற்காக 1956-ஜூலை 1-ந் தேதியிலிருந்து டிசம்பர் 31-ந் தேதி வரையில் ரூ.-1,68,50,000-ம், மேற்கு வங்கத்திற்கு மட்டும் அக்கால அளவில் ரூ. 58 40,000-ம அனுமதிக்கப்பட்டதாம்.

இந்த ஆறு மாத காலத்தில் வெளியேறி வந்தவர்களின் புனர்வாழ்வுக்கும் அபிவிருத்தி வேலைகளுக்குமாக மாதத்திற்கு ரூ $1\frac{1}{2}$-கோடி வீதம் மொத்தத்தில் ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்டதாம்.

ரூ. 213 இலட்சம் செலவில் 20 சுதேசா தொழில்களை ஏற்படுத்தி 9 600 பேர்களுக்கு வேலையளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

ரூ. 531 இலட்சம் இந்த 6 மாத காலத்தில் கடன் வசதிக்கு அனுமதிக்கப்பட்டதாம்.

மாநில அரசுக்கு ரூ 4 27 33 000 இதற்காகத் தரப்பட்டிருக்கிறது.

ரூ. 75,000 கல்கத்தாவிலுள்ள தாய் சேய் நல விடுதிக்கு தரப்பட்டுள்ளதாம்.

5-கோடி டன்

வெடிமருந்துகளுக்குச் சமமாம்?

வாஷிங்டன், பிப் 8—

"இதுவரையில் வெடிக்கப்பட்டுள்ள அணுகுண்டுகளும், நீர்வளிக் குண்டுகளும் 5 கோடி டன் வெடிமருந்துகளுக்குச் சமமாகும்" என்று கொலம்பியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ஜப்பானில் இரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டைப்போல 2,500 குண்டுகளுக்கு இ[illegible] சமமாகும் என்றும் கூறப்படுகிறது.

ஆட்சியாளர் ஆணவத்திற்கு முடிவுகட்ட தி. மு. கழகத்திற்கு ஆதரவு தாரீர்

திருச்சினம்பூண்டி தேர்தல் கூட்டத்தில் கழகத் தோழர்கள் வேண்டுகோள்

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 256 தரப்பட்டது

திருச்சினம்பூண்டி, பிப். 5—

திருவையாறு தொகுதியைச் சேர்ந்த திருச்சினம்பூண்டியில், கடந்த மாதம் 26-ந் தேதியன்று இங்குக் கழகச் சார்பில் சிறந்த முறையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் சி. துரைமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில், திருவையாறு தொகுதியில் சென்னை சட்டசபைக்கு போட்டியிடும் தி. மு. கழகத் தோழர் தே. பட்சிராசன் அவர்களிடம் தேர்தல் நிதியாக ரூ. 256 அளிக்கப்பட்டது.

நாட்டுக்குக் காங்கிரசார் செய்த துரோகங்களையும், அநீதிகளையும் சுட்டிக்காட்டி, அல்லல்படும் மக்களின் அவலநிலை போக்க—ஆட்சியிலிருக்கும் ஆணவக்காரர்களைக் கண்டிக்க நல்லதோர் எதிர்க்கட்சி நாட்டில் உருவாக, வருகிற பொதுத் தேர்தலில் மக்கள் தி. மு. கழகத்தின் கொள்கைகளுக்கும், இலட்சியங்களுக்கும் ஆதரவு தந்து, கழகத் தோழர்களை வெற்றி பெறச் செய்யக் கோரி, தோழர்கள் இரா. கருப்பண்ணன், நாகராசன், துரை-வையாபுரி, முத்தீசுவரன், ப. கலியபெருமாள், முத்தண்ணு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நிதி விவரம்: திருச்சினம்பூண்டி தி மு. கழகம்—ரூ. 101; தோழர் இரா. இராசகோபால்—ரூ.150; தோழர் ஆர். கோவிந்தராசு—ரூ. 5 ஆக மொத்தம் ரூ 256. (ச. தி)

****

ஆலைகள் ஆயிரம் வடக்கே!

அடுக்குச் சொல் அலங்காரம் அல்ல!
புள்ளி விவரங்கள் போதிக்கும் பாடம்!
கண் படைத்தோர் காணும் காட்சி!

★

(1950-ம் ஆண்டு கணக்குப்படி)

சர்க்கரை ஆலைகள்
வடக்கே 287 தெற்கே ?

பஞ்சாலைகள்
வடக்கே 437 தெற்கே ?

தாவர எண்ணெய் உற்பத்தி ஆலைகள்
வடக்கே 272 தெற்கே ?
(பம்பாயில் மட்டும்)

இரும்பு எஃகு வார்ப்படத் தொழிற்சாலைகள்
வடக்கே 12 தெற்கே ?
(பம்பாயில் மட்டும்)

எஞ்சினியரிங் தொழிற்சாலைகள்
வடக்கே 554 தெற்கே ?
(பம்பாயில் மட்டும்)

இரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள்
வடக்கே 93 தெற்கே ?
(பம்பாயில் மட்டும்)

★

இவை மட்டும்தானா?

கந்தக அமிலம், சோடா உப்பு, காஸ்டிக் சோடா, எருவகைகள், கால்ஷியம் கார்பைட், பொட்டாஷியம் குளோரைடு, வெடிமருந்துகள், தார், சாயம் (இவை கன இரசாயனத் தொழில்கள்) பெட்ரோல் சுத்திகரிப்புத் தொழில், செய்தித் தாள் உற்பத்தித் தொழில், வர்ணங்கள், வார்னிஷ்கள், சணல், கார் டயர்கள், சைக்கிள் டயர்கள், முதலியவை; டீசல் இயந்திரங்கள் பம்புகள், தையல் இயந்திரங்கள், ஹரிக்கேன் விளக்குகள், மின்சார மோட்டார்கள் திரவமில்லாத பாட்டரிகள், சேகரிப்புப் பாட்டரிகள், மின்சார பல்புகள், வானொலி ஒலிப்பதிவுக் கருவிகள், தந்திக் கம்பிகள் மின்சாரக் கம்பிகள், மின்சார விசிறிகள், கண்ணாடிச் சாமான்கள், பிளாஸ்டிக் சாமான்கள், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சாமான்கள், குளுக்கோஸ், மற்றும் மருந்து வகைகள் உற்பத்திக்கான தொழிற்சாலைகள்.

இவை எல்லாம் நூற்றுக்கணக்கில் வடக்கே!
இங்கோ!—தொழில் இல்லை—வேலையில்லை!

வறுமை! பஞ்சம்! பசி! பட்டினி! இவைதான்

இந்த அலங்கோலம் ஒழிய—நாடு தொழில் மயமாக—நாட்டவர் நல்வாழ்வு பெற—

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே

வாக்கு அளியுங்கள்!

****

எவருடைய...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாப்பு தெருவில், ஸ்டேண்டர்ஸ் பாக்கு த்தூள் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில், தோழர் கே. எஸ் சிவானந்தம் தலைமையில் தி மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

துவக்கத்தில், தோழர் சா.சு மணியின் பத்மா, வனஜா ஆகியோர் கழகப் பண்பாடினர். தோழர் வி ஜி கிருஷ்ணன் பிரம்பு கலைகளால் பலவித உடற்பயிற்சிகளை அழகுறச் செய்துகாட்டினர்.

சிறுவன் கண்ணன், சிறுமி எஸ். கஸ்தூரி, தோழர்கள்சத்தியநாதன், வீரப்பன், பெ தா இளமொழியன், ம பொ. வேதாசலம், தோழியர் ஜி பி. அமுதா ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து, தோழர்கள் சி ஆர். பாலசுந்தரம, கோ செங்குட்டுவன் ஆகியோர் 'பொதுத் தேர்தலில் அத்தொகுதியில் போட்டியிடும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசனை ஆதரித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தி மு. கழகத்திற்கும மக்களுக்குமுள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி, தேர்தலுக்காக மட்டும் மக்களை நாடுவோர் தி. மு கழகத்தவரல்லர் என்பதனை விளக்கிப் பேசினர்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் காங்கிரசாட்சியின் கொடுமைகளையும், மக்களை மதியாத சர்க்காரின் ஆணவப் போக்கினையும் எடுத்துரைத்து, கழக அபேட்சகர்களுக்கு மக்கள் ஆதரவு தர வேண்டிக்கொண்டார்.

இறுதியாக தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி அவர்கள் கடந்த 9 ஆண்டுக் காங்கிரசாட்சியில் மக்கள் அடைந்த இன்னல்களை சுட்டிக்காட்டி, அவைகளை யெல்லாம் நீக்கக்கூடிய கட்சி தி மு. கழகம் ஒன்றேதான் என்று எடுத்துக் கூறினர்.

தி மு கழகத் தேர்தல் நிதிக்காக, 'ஸ்டேண்டர்ஸ் பாக்குத் தூள் கம்பெனி'த் தொழிலாளர்கள் சார்பில் ரூ. 101 கொண்ட பண முடிப்பும் கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான தொகை ரூ 11-15-9ம், 'ஸ்மார்த்' அச்சகத் தொழிலாளர்களின் சார்பில் தோழர் என். விட்டல்ராசன் மூலம் ரூ. 5—6—3ம் தோழர் என் வி நடராசன் அவர்களிடம் தரப்பட்டது.

உரிமைப் போர் வீரர்களை உருக்குலைத்துவிடுவாராம்!

இலங்கைத் தமிழரை மிரட்டுகிறார் சிங்களப் பிரதமர்!

கொழும்பு, பிப். 9—

இலங்கைத் தமிழர்கள் தனித் தமிழ் நாடு கோரிப் போராடிவருகின்றனர். சமீபத்தில் மோட்டார் பலகைகளில், சிங்கள எழுத்துக்களுக்கு மாறாகத் தமிழ் எழுத்துக்களைப் பொறித்து கடந்த ஜனவரி 19-ந் தேதிமுதல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு செய்வோர்மீதும் சட்டங்களை மீறுவோர்மீதும் இலங்கை அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாம்—கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களாம்! அபராதம் கட்ட மறுப்பவர்களின் கார்களைப் பறிமுதல் செய்து, ஏலத்தின் மூலம் தொகையை அரசாங்கம் வசூலிக்குமாம்!

இவ்வாறெல்லாம் தமிழ் மக்களை மிரட்டியிருக்கிறது, பண்டாரநாயகா அரசாங்கம்!

'சிங்களமொழி' ஒன்றையே இலங்கை அரசாங்க மொழியாக்குவதைக் கண்டித்தே, தமிழர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

தேர்தலின்போது புதிய திட்டம்!

சென்னை, பிப். 9—

சென்னை, மாநிலத்திற்கு மேலும் 15 தேசிய நல்வளர்ச்சித் திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவாம். 1957 ஏப்ரல் முதல் இந்தத் திட்டங்களை அமுல் செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளது.

கோவை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் தலா 2 வீதமும், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒன்று வீதமும் திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்னும் எத்தனை ஆண்டுக் காலமோ?

ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசத்தை ஒழிக்கவும், பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்கவுமே ஐந்தாண்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம்!

இன்னும் பத்தாண்டுக் காலத்திற்குள் நாட்டில இன்று நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடப்போகிறதாம்!

ஆனால் அதற்கும் ஒரு நிபந்தனை விதிக்கிறார் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி! 'காங்கிரஸ் கட்சி இனிமேலும் தொடர்ந்து ஆட்சியில் இருந்தால்தான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்; காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இதைக்கட்டாயம் நிறைவேற்றும்' என்று கூறியிருக்கிறார்!

விஜயவாடாவில் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது!

குறிப்பு: தேவையற்ற கல்வித் திட்டங்களுக்கு எண்ணற்ற பணத்தை வாரிஇறைக்கிறது காங்கிரஸ் சர்க்கார் என்பதும், தேவையான திட்டங்களுக்கு பணம் ஒதுக்குவதில்லை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

காங்கிரஸ் ஆட்சியில்:

வரிப்பணம் பாழாகும் கொடுமை

வேண்டாத திட்டங்களுக்குப் பணத்தை வாரி இறைக்கும் அநீதி!

ஆதாரக் கல்வி என்றால் என்ன?—'பத்தாண்டுகள் முயற்சிக்கிறேன்' புரியவில்லை என்கிறார் சர். சி. பி.

சென்னை, பிப் 11—

"இன்று நாட்டில் உள்ள பல கல்வி நிறுவனங்களும், தேவையான அளவுக்குத் தகுதியும் திறமையும் பெற்ற நல்ல தரமான ஆசிரியர்கள் கிடைக்கப்பெறாமல் இருக்கின்றன. சமுதாயத்தில், ஆசிரியர் வகுப்பினர் மதிப்பிற்குரியவர்களாகக் கருதப்படவேண்டுமென வெறும் வாயளவில்தான் பேசப்படுகின்றதே தவிர அதற்கான உண்மையான முயற்சிகள் எதுவுமே மேற்கொள்ளப்படாதது குறித்து நான் மிக வருந்துகிறேன். ஆசிரியர்களுடைய குறைகள் எல்லாம் நீக்கப்பட்டாலன்றி, அத்துறையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு திட்டமும் உருப்படியாக வெற்றிபெறப் போவதில்லை. ஒரு உயர்ந்த தரக் கல்வியின் மூலமாக மட்டும்தான் பள்ளிகளுக்குத் தேவையான நல்ல தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் உற்பத்தி செய்யப்படமுடியும்."

இக்கருத்துக்களை டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் இங்கு நடைபெற்ற பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"கல்லூரிகளும் மற்ற கல்வி நிறுவனங்களும் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும் என்ற தவறான மனப்பான்மை—நம்பிக்கை, ஆரம்பப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் போதிய தகுதியும் திறமையும் பெற்ற ஆசிரியர்கள் கிடைக்க முடியவில்லை என்ற ஒரு சூழ்நிலையை மட்டுமின்றி, தகுதி பெற்றத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதற்கும் இயலாமலாக்கிவிட்டிருக்கிறது.

"இந்த நிலைமைகளுக்கெல்லாம் முக்கியக் காரணமாக உள்ளது பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் எல்லாம் இன்னும் சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெறாமல் இருப்பதுதான்.

"கல்வியைப் பொறுத்து சர்க்கார் கடைப்பிடித்துவரும் கொள்கை குறித்துக் கூறக்கூடிய முதல் குற்றச்சாட்டு, ஆதாரக்கல்வி அல்லது துவக்ககாலப் படிப்பைப் பொறுத்ததேயாகும். 'ஆதாரக் கல்வி' என்றழைக்கப்படுகின்ற கல்விமுறை என்றால் என்ன என்பது பற்றி, நானும் கடந்த 10 ஆண்டுக் காலமாகவே அறிய முயற்சித்து வந்திருக்கிறேன்; என்றாலும் இன்னும் எனக்கு அது என்னவென்றே புரியவில்லை; என்னுடைய முயற்சிகளெல்லாம் சோமாறான—மூறான வெற்றிகளைத்தான் பெற்றிருக்கின்றன!

"அடுத்தபடியாகக் கூறக்கூடிய குற்றச்சாட்டு, பல நோக்குத் திட்டப் படிப்பாக மாற்றப்பட்டு வருகின்ற இடைநிலைக் கல்வியைக் குறித்ததாகும். எதிர்பார்க்கப்படுகின்ற புதிய குறிக்கோள்களுடன் மாற்றி அமைக்கப்படும் இந்த 'ஆதாரக் கல்வி'க்கும் 'பல நோக்குத் திட்டக் கல்வி'க்கும், அதிகமான அளவில் கல்விச் சாதனங்களும், திறமை மிக்க ஆசிரியர்களும் தேவை என்ற உண்மையை மறந்துவிட்டார்கள்.

"இன்று நாட்டின் கல்வித்துறையில், கல்லூரிகளுக்குப் போதுமான அளவுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை; பல்கலைக் கழக மானியக் குழுவும் தேவையான நிதி வைத்திருக்கவில்லை; இந்நிலையில், இந்தியாவின் திட்ட செலவுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில், சரியான அளவு விகிதத்தில் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படாமல் மிகக் குறைவாக இருக்கிறது. இதனால், எதும் செய்யமுடியாத நிலையில், மானியக்குழுவும் இருக்கிறது."

உலகத் தாத்தா!

ஹாங்காங், பிப் 11—

சீனாவில், கூவாங்சி மாநிலத்தில் கூட்டுறவு விவசாயப் பண்ணையில் சேர்ந்துள்ள லீ-சுன் என்பவருக்கு வயது 136 ஆகிறதாம்! அவருக்கு திருமணமாகி 100 ஆண்டுகள் ஆகிவிட்டனவாம்!

சென்னையில் சுரங்கப்பாதை அமைப்பதற்குத் திட்டம்

சென்னை, பிப் 11—

சென்ட்ரல் இரயில் நிலையத்தின் முன்பு, பெரிய வைத்திய விடுதி உள்ள சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கத்துடன், நடந்து செல்பவர்களுக்கென சுரங்கப் பாதை அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

தென்பகுதி இரயில்வே மின் பொறி நிபுணர்களுடன், சென்னை நகரசபை அதிகாரிகள் இதுபற்றி கலந்து பேசியுள்ளனராம்.

திட்டப் பரிசீலனை முடிந்ததும், இதற்குத் தேவைப்படும் மொத்த செலவு தொகை மதிப்பீட்டுடன் சென்னை அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பப்படுமாம்.

2,000 வாகன்கள்; 24 இரயில் கார்கள்

இந்தியாவுக்குக் கிடைக்குமாம்

புதுடில்லி, பிப். 12—

வரும் ஏப்ரலில் கொழும்பு உதவித் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவிடமிருந்து இந்தியாவுக்கு 2000 இரயில் மூடுபெட்டிகள், 24 இரயில் கார்கள் கிடைக்கும் என்று தெரியவருகிறது.

மேலும் இந்திய வானொலி ஒலிபரப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கான சாதன உதவிகளும் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

மன்னரின் மாளிகைகள் ஏலம் விடப்படுமாம்!

எகிப்தின் முன்னாள் மன்னர் பரூக்கின் மாளிகைகள், கட்டிடங்கள், விரைவில் ஏலம்விடப்படுமாம்.

சாய இருக்கும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாருங்கள்; நான் திராவிட நாடு பற்றிப் பேசுகிறேன்; நான் தவறான வழியில் செல்வதாகக் கருதினால் என்னைத் திருத்தச் செய்யுங்கள்; நான் கூறுவது நியாயம் என்று பட்டால், என் தோளைத் தட்டிக்கொடுக்க வேண்டாம் உங்கள் பண்டிதர்—'யோசிக்கிறேன்' என்று காமராசர் பாஷையிலாவது கூறட்டும்,' என்று எதனை கூட்டங்களில் எடுத்துரைத்தேன்? செய்தார்களா? செய்வதற்குத் துணிவிருந்ததா, இங்குள்ள காங்கிரசாருக்கு?"

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

தேர்தல் கூட்டங்கள்

★

13—2—57 மாலை 6 மணிக்கு சென்னை வரதராஜபேட்டையில் (கோடம்பாக்கம் இரயில் நிலையத்திற்கு அருகில்) தோழர் செ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் 35-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் பி பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், சைதை. சம்பந்தம், ஏ. எஸ். ஜேசுபாதம் பேசுவர்.

* * *

13—2—57 மாலை 6-30 மணிக்கு சென்னை பெத்து நாய்க்கன்பேட்டை பத்மஸ்ரீ டாக்கீஸ் அடுத்த சக்கரைச்செட்டி தெருவில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் நடைபெறும். தி. மு. கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து தோழர் க. அன்பழகன், வி. எஸ். கோவிந்தராசன், ஜார்ஜ் மற்றும் பலர் பேசுவர்.

* * *

14—2—57 மாலை 6 மணிக்கு சென்னை—7-வது வட்டம் ஸ்டான்லி நகரில் (நாகப்பா நகர்) தோழர் ஆர். டி. தட்சிணாமூர்த்தி தலைமையில், தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி வி எஸ். கோவிந்தராசன், ஆர் ஜார்ஜ், பெ. தா. இன்மொழியன், துரை-செல்வராசன் ஆகியோர் பேசுவர்.

'பல்கலைக் கழகங்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும்'

பம்பாய், பிப். 10—

பாரதிய வித்யாபவன விழாவில் பேசுகையில், பம்பாய் மாநில கவர்னர் பிரகாசா, 'பல்கலைக் கழகங்கள் கூடுமானவரையில் சுதந்திரமாக—அரசாங்கத்தினர் ஆதிக்கம் இல்லாமல் இயங்குதல் வேண்டும்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

'காங்கிரசின் நேர்மையை இனியும் நம்புவது பைத்தியக்காரத்தனம்'

அகாலித் தலைவர் தாராசிங் கருத்து

பாட்டியாலா, பிப், 11—

"எதிர்க்கட்சியாக இயங்காமல், அகாலிதளத்தை காங்கிரசில் சேருமாறு செய்ததின் மூலம் நான் பெரும் தவறு செய்துவிட்டேன்,"

என்று மாஸ்டர் தாராசிங் இங்கு கூறியிருக்கிறார்.

ஏமாந்தோம்!

"அரசியல் வாழ்விலும், நிர்வாகத்திலும் நிலவும் இலஞ்சம் போன்ற ஊழல்களை, காங்கிரசிற்குள்ளிருந்து எதிர்த்துப் போராடுவதே நல்லது—என்று என்னுடைய தோழர்கள் கூறினார். அவர்களது நிர்ப்பந்தத்திற்கு இணங்கி, காங்கிரசில் சேர்ந்ததினால் இன்று ஏமாற்றப்பட்டுவிட்டோம். காங்கிரஸ் அகாலிதளத்திற்கு தந்த உறுதிமொழிகளைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டது. இனியும் காங்கிரசின் நேர்மையில் நம்பிக்கை வைப்பது பைத்தியக்காரத்தனம்"

என்றும் தாராசிங் வருத்தத்தோடு கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சி

காங்கிரசுக்கு எதிரான ஒரு அரசியல் கட்சியைத் தானே துவக்கவிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

வெறியின் உச்சத்தை எட்டுகிறது பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

ஒரே நாளில் 200 அல்ஜீரியர் படுகொலை

அல்ஜீரியா, பிப். 11—

ஏகாதிபத்தியங்கள், தங்களுடைய காலனிகளில் இதுகாறும் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகளின் வேகத்தையும், தரத்தையும் முறியடித்து புதிய 'ரிகார்டு' ஒன்றை ஏற்படுத்த எண்ணுகிறது போலும், பிரான்சு!

வெட்கம்! வெட்கம்!!

"சேதுபதி, சுயேச்சையாகப் போட்டியிட்டபோதும் ஒரு கட்சி என்ற முறையில் காங்கிரஸ் அவரை ஆதரிப்பதற்கில்லை,"

என்று, கோவைக் குமரன் சி. சுப்பிரமணியம் விளக்கம் தந்துவிட்டு 'இராமநாதபுரம் தொகுதிக்கு சேதுபதியைத் தவிர்த்து வேறு ஆள் கிடைக்கவில்லை; அதனால்தான் போட்டியிடவில்லை' என்றும் கூறினாராம்!

வெட்கம்! வெட்கம்!! நேற்று முன்தினம் காங்கிரஸ்காரரான சேதுபதியைத் தவிர, இராமநாதபுரத்தில் வேறு காங்கிரஸ்காரரே இல்லை என்பது வெட்கக்கேடானது இல்லையா?

படுகொலை

ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் நூற்றுக்கணக்கான அல்ஜீரிய மக்களை, அவர்கள் விடுதலை கோருகிறார்கள் என்பதற்காகக் கொன்று குவித்து வருகிறது பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

நேற்று மட்டும் அல்ஜீரியா முழுவதிலுமாக 200 பேர்களை பிரெஞ்சு இராணுவம் படுகொலை செய்ததாம்! கணக்குத் தரப்பட்டிருக்கிறது, இன்று!

இந்தப் படுகொலை, தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டுமோ?

6,000 தபால்—தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கௌஹாத்தி, பிப். 11—

இன்று நள்ளிரவு 12 மணி அடித்ததும் இங்கு பணியாற்றும் தபால்—தந்தி ஊழியர்கள், காரியாலயத்தை விட்டுவெளியேறினர். சுமார் 6,000 பேர் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர்.

ரூ. 4-இலட்சம் செலவில்!

புதுடில்லி, பிப். 8—

சென்னை துறைமுகக் காரியாலயத்திற்கு அருகில் சுமார் 17 ஏக்கர் நிலத்தை இந்திய அரசாங்கம் குத்தகைக்கு எடுத்துள்ளது. இந்த இடத்தில் ரூ. 4-இலட்சம் செலவில் மாலுமிகளுக்கு ஒரு நவீன விடுதியைக் கட்டப்போகிறார்களாம். இந்த விடுதியில் 150 பேர் தங்க வசதி செய்யப்படுமாம்.

20 – இலட்சம் டன் இரும்புக்கனி கிடைக்கும்?

புதுடில்லி, பிப் 12—

பழைய 'பெப்சு' மாநிலத்தின் மோகிந்தர்கர் பகுதியில் $2\frac{1}{2}$ மைல் நீளத்திற்கு இரும்புத் தாதுப் பொருள் கிடைப்பதாக இந்திய அரசாங்க பூகர்ப்ப இலாகா கண்டுபிடித்துள்ளதாம். இங்கு 20 இலட்சம் டன் இரும்பு கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சியில் எம்.ஜி.ஆர். நாடகங்கள்

16-2-57 சனி இரவு 10-மணிக்கு

காஞ்சி நகர மன்றத்திற்கு எதிரிலுள்ள

திறந்த வெளி அரங்கில்

★

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

& குழுவினர் நடிக்கும்

இன்பக் கனவு

நாடகம் நடைபெறும்

★

17-2-57 ஞாயிறு இரவு 10-மணிக்கு

சுமைதாங்கி

நாடகம் நடைபெறும்

கட்டணம்: ரூ. 3, 2, 1. பெண்களுக்குத் தனி இடம் உண்டு

இரு தினங்களுக்கு முன்பே கண்ணன் லாரி சர்வீசில் டிக்கெட்டுகள் கிடைக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.

உங்கள் வாக்கு தி. மு. க. அபேட்சகருக்கே!